# ஆழ்வார்கள் காட்டிய எளிய பக்திநெறிகள்

**க.மு. பொன்முடி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி*
*உதகமண்டலம்*

பாரதத்தைப் பொறுத்தவரை தத்துவஞானம் என்பது ஆன்மிகம் சார்ந்த ஒன்றாகவே வளர்ந்து வந்துள்ளது. தன்னை அறிந்து மெய்யுணர்வு பெற விரும்பிய ஆழ்வார்கள் அடுத்ததாக இறைவன், பிரபஞ்சம், உலகம், அதன் தோற்றம், காலம் மற்றும் அவைகளின் இறை தொடர்பு பற்றியும் சிந்தித்தனர். எனவே வேத காலந்தொட்டு ஒரு தனி மனிதனைப் பற்றி அறிந்துக் கொள்ளல் என்பது இறைவனுடன் அவன் கொள்ளும் இறைதொடர்பு சார்ந்த சிந்தனையாகவே இருந்து வருகிறது.

பக்திஇயக்கம் தோன்றிய காலத்தில் தமிழகத்தில் இறைவனைப் பற்றிய நம்பிக்கைகள் அற்ற புத்தம், சமணம் ஆகிய இரு சமயங்களும் தம் செல்வாக்கினை இழக்கத் தொடங்கின. இக்காலத்தில் புத்துயிர் பெற்ற சைவம், வைணவம் இரண்டும் தத்தம் சமயங்களுக்கு தத்தம் இறைவனையே அடிப்டையாகக் கொண்டன. சைவச் சமயத்தை நாயன்மார்களும் வைணவச் சமயத்தை ஆழ்வார்களும் மீட்டெடுத்து தழைத்தோங்க வைத்தனர். இச்சமயங்களை எளிய மக்களுக்குரிய நெறியாகவும் அளித்தனர்.

ஆழ்வார்கள் பன்னிருவர். வரலாற்று காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே பின்பற்றப்படும் திருமால் வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்ட வைணவத்தின் கருத்துக்களைத் தம் ஆன்மாவால் உணர்ந்து அந்த உயர்ந்த கருத்துக்களின் சாராம்சத்தினை மிகவும் எளிமையாகத் தம் அருளிச்செயல்களான இலக்கியங்கள் வழி வெளியிட்டது அவர்களின் சிறப்பாகும். தூய்மையான மனம், பிரதிபலன் பாராத பேரன்பு, ஆழமான அசைக்க முடியாத நம்பிக்கை, எளிமை என்ற பண்புகளால் இறைவனை அறிந்துக் கொண்ட ஆழ்வார்கள் அந்த இறையனுபவத்தை எல்லா தரப்பு மக்களும் பெற்று உய்ய வேண்டும் என்று விரும்பி அதற்கான எளிமையானதொரு பக்தி வழியைக் காட்டிச்சென்றனர்.

இறைவன் மீது கொள்ளும் பேரன்பே பக்தி ஆகும். இறைவனை அடைவதற்காக காட்டப்பட்ட கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் இவைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்த ஆழ்வார்கள், அதில் பக்தி நெறியை தேர்ந்து எடுத்தனர். அந்த பக்தி நெறியிலும் பிரபத்தி என்று கூறப்படும் சரணாகதி நெறியினைச் சிறப்பாகக் கொண்டு அனைவருக்கும் அதனை அளித்தனர். ஆழ்வார்கள் கி.பி. 5 முதல் கி.பி.9ஆம் நூற்றாண்டு வரை வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்திருந்தாலும் அவர்களது படைப்புத் தொகுப்பான நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைப் படிக்கும்போது அவர்களுக்கிடையில் உள்ள கருத்தொற்றுமை நன்கு புலப்படும். அதற்குக் காரணம் இறைவனே விரும்பி அவர்கள் வாக்கின் வழித் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான் என்பர். இவ்வுலகம் இறைவனது விளை நிலம். இறைவன்தான் உழவன். பக்தி என்னும் விதையை அவன் விதைக்கிறான் என்று திருமிழிசை ஆழ்வார் கூறுகிறார்.

**“வித்தும் இடவேண்டும் கொல்லோ விடை அடர்த்த**
**பத்தி உழவன் பழம் புனத்து”**

எனவே தான் இறைவனே தன் பரமபதத்திலிருந்து இறங்கி அவதாரங்கள் எடுத்து இவ்வுலகிற்கு வருகிறான். தர்மத்தைக் காக்கவும், அதர்மத்தை அழிக்கவும், தன்னைச் சரண் அடைந்தாரைக் காக்கவும் இறைவன் தானே விரும்பி பற்பல அவதாரங்கள் எடுக்கிறான் என்பது வைணவர் நம்பிக்கை. அந்த அவதாரங்கள் பற்றிய செய்திகளையும், கதைகளையும் கூற புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய நூல்கள் ஞானிகளாலும், முனிவர்களாலும் அருளப்பட்டன. ஆழ்வார்கள் பெரிதும் இந்த நூல்களின் கருத்துக்களையே தம் பாடல்களில் கையாளுகின்றனர்.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு ஜீவனும் பரமாத்மாவாகிய இறைவனுடன் தொடர்பு கொண்ட வாழ்வினைத்தான் வாழ வேண்டும், அவனது முக மலர்ச்சி ஒன்றே தம் வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று ஆழ்வார்கள் கருதினர். எனவே இறை அருள் பெறவும், இறையின்பம் பெற்று மேலுலக வாழ்வினை இந்த பூவுலகிலேயே அனுபவித்து பேரின்பம் பெற்றிடவும் எளிய பக்தி வழியினைக் காட்டினர்.

**அகத்தூய்மை, புறத்தூய்மை**

இறைவனது இயல்பினை எடுத்து கூறும்போது ஆழ்வார்கள் அவனது முதன்மை குணமாக இறைவனது எளிமைத் தன்மையையே கூறிச் செல்கின்றனர். வேதங்களும், முனிவர்களும், தேவர்களும் பின் சென்று வணங்கி நிற்கும் இறைவன், தன் மக்களை வாழ்விக்க வேண்டி இராமனாக அவதாரம் செய்து காட்டில் வனவாசம் சென்றதும் கண்ணனாக அவதாரம் செய்து கன்றுகள் மேய்த்ததும் ஆழ்வார்களை மனமுருகச் செய்தது. எனவே இறைவன் எளிமையின் உருவம்: அன்பின் வடிவம் என்பதை தம் பாசுரங்களில் அடிக்கடி பாடிச் செல்கின்றனர். எனவே இறைவனை அடைவதற்கான நெறிகளைப் பாடும்போது எளிமையான வழிகளையே போற்றுகின்றனர். நீராடிய பின் மனதில் உண்மை அன்போடும், குற்றமற்ற மனதோடும் வணங்க வேண்டும் என்பது ஆழ்வார்கள் கண்ட நெறி ஆகும். ஆண்டாள் தனது திருப்பாவை பாசுரத்தில்,

**"...செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்றோதோம்,**
**யமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி**
**உய்யுமாறு எண்ணி உகந்து ஏலோர் எம்பாவாய்" (475)**

என்று தாம் தீச்செயல்களைச் செய்ய மாட்டோம் என்றும், தவம் செய்பவர்க்கு பிச்சை இட்டு அலங்காரங்கள் தவிர்த்து, விடியலில் எழுந்து நீராடி இறைவனை வணங்குவோம் என்றும் வழி காட்டுகிறாள். மேலும் ஒரு பாசுரத்தில்,

**"தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது**
**வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க**
**போய பிழையும் புகு தருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும்" (478)**

என்று காலையில் நீராட வேண்டும் என்றும், பின் மனம்ஒன்றி வழிபடவேண்டும் என்றும் கூறுகிறாள். தவிர, திருமிழிசை ஆழ்வார் தன் பாசுரத்தில்,

**".... நின்று நின்று அவன் குணங்கள் உள்ளி, உள்ளம் தூயராய்ச்**
**சென்று சென்று" (826)**

என்று மனத்தூய்மை குறித்துக் கூறுகிறார்.

தம் உடலை துன்புறுத்திக் கொண்டு செய்யும் வழிபாட்டு முறைகளை விரும்பாத ஆழ்வார்கள் அதே போன்று சடங்குப் பூர்வமாகச் செய்யும் பக்தி முறைகளையும் ஆதரிப்பதில்லை.

**"குளித்து மூன்று அனலை ஓம்பும் குறிக்கோள் அந்தண்மை தன்னை**
**ஒளித்திட்டேன்" (896)**

என்று தொண்டர்அடிப்பொடிஆழ்வார் பாடுகிறார். எனவேதான், தினந்தோறும் 1001 அடியார்களுக்கு உணவிடும் சேவையை, ஒரு சடங்காகச் செய்துக்கொண்டு வாழ்ந்து வந்த திருமங்கை ஆழ்வாரினை இறைவனே நேரில் சென்று திருமந்திர உபதேசம் செய்து திருத்திப் பணிக்கொண்டான் என்பர்.

**"புந்தியால் சிந்தியாது ஓதி உருவு எண்ணும்**
**அந்தியால் ஆம் பயன் அங்கு என்?"**

என்று பொய்கையாழ்வார் **(2114)** கேட்கிறார்.

**மலர் வழிபாடு**

ஆழ்வார்களை பொறுத்தவரை அவர்களது வாழ்வும், வாக்கும் ஒன்றே. பெரியாழ்வார் நந்தவனம் அமைத்து இறைவனுக்கு பூமாலை செய்து இறை அருள் பெற்றார். அவரது மகளான ஆண்டாள் ஒரு படி மேலே சென்று தனது தூய பக்தி மனதால் தான் சூடி அழகு பார்த்த மாலையை இறைவனே விரும்பும்படிச் செய்து **"சூடிக் கொடுத்த சுடர் கொடி"**ஆனாள். பெரியாழ்வார் கண்ணனைக்

குழந்தையாக்கிப் பாடிய பாசுரங்களில் ஒரு பத்து முழுவதும் யசோதை நிலையில் நின்று இறைவனுக்கு விதம் விதமாகப் பூச்சூட்டி அழகு பார்க்கிறார்.
பூதத்தாழ்வார் ஒரு அழகான எளிய பாடலில் மலர் வழிபாடு பற்றி பின்வருமாறு பாடுகிறார்.

**“தாம் உளரேதம் உள்ளம் உள் உளதே: தாமரையின்**
**பூ உளதே ஏத்தும் பொழுது உண்டே:” (2202)**

இது போலவே பூதத்தாழ்வார் ஒரு பாசுரத்தில்

**“பூந்துழாயான் அடிக்கே போதொடு நீர் ஏந்தி,**
**தாம் தொழா நிற்பார் தமர்” (2124)**

என்று இறைவனை மலர் வழிபாடு செய்பவர்களுக்கு மனதில் உள்ள குற்றங்கள் அகலும். தீவினைகள் சேராது என்று வழி காட்டுகிறார். இது போலவே திருமால் வழிபாட்டில் துளசி முக்கிய இடம் பிடிக்கிறது.

இறைவனுக்கு துளசிமாலை சார்த்தி வழிபட வேண்டும் என்பர். இதனை ”திருத்துழாய் எழுந்தருளப் பண்ணுதல் “என்று அழைப்பர். ஆழ்வார்கள் பாடிய அகத்துறைப் பாடல்களில் கூட தலைவியின் பசலைநோய் தீர்க்க திருமால் அணிந்த திருத்துழாய் மாலையை அவளுக்கு அணிவிப்பதாய் பல பாசுரங்கள் பாடப்பட்டு இருப்பதைக் காணலாம்.

**அடியார் சேவை**

வைணவத்தைப் பொறுத்தவரைப் பாகவதர் சேவை பகவான் சேவையை விடச் சிறப்பிற்கு உரியது என்பர். மதுரகவியாழ்வார் தனது **”கண்ணி நுண் சிறு தாம்பு”** பாசுரத்தில் திருமாலான இறைவனைப் பற்றி பாடாமல் இறையடியாரும், தனது குருவுமான நம்மாழ்வார்ப் பற்றி மட்டுமே பாடியுள்ளமை இதற்குச் சான்றாகும். இறைஅடியார் சேவையின் இன்றியமையாமைப் பற்றி மிகவும் போற்றி அதனை தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டவர் குலசேகர ஆழ்வார். அவர் தனது பாசுரத்தில்,

**“ஆடிப் பாடி அரங்க!ஓ! என்று**
**அழைக்கும் தொண்டர் அடிப் பொடி**
**ஆட நாம் பெறில், கங்கை நீர் குடைந்து**
**ஆடும் வேட்கை என் ஆவதே” (659)**

என்று புனிதநதியான கங்கை நீரில் நீராடுவதை விட அடியார் பாத தூளியினை தனது தலையில் தரிப்பது புண்ணியம் என்கிறார். இறைஅடியார்களுக்குச் செய்யும் தொண்டு, இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பது ஆழ்வார் காட்டும் ஒரு பக்தி நெறி ஆகும்.

குலசேகர ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் போன்றோர் தாம் பெற்ற செல்வம் முழுவதையும் இறை சேவை, இறையடியார் சேவைக்கே செலவிட்டனர் என்பதை அவர்களது வாழ்க்கைக் காட்டுகிறது.

**திருநாம வழிபாடு**

வைணவத்தில் இறைவனது திருநாம வழிபாடு முதன்மைப் பெற்ற ஒன்றாகும். இறைவனது திரு உருவச் சிறப்பு, திருவிளையாடல் சிறப்புப் பற்றிக் கூறப்படுவது போலவே இறைவனது திருப்பெயரின் சிறப்பும் பெரிதும் போற்றி வணங்கப்படுகிறது. இறைவனது ஐந்து நிலைகளில் பரத்துவம், வியூகம், விபவம், அர்ச்சை ஆகியவற்றில் இறைவனுக்கு வெவ்வேறான பெயர்கள் வழங்கப்படுகிறது. ஆயிரம் பேருடையான் என்று இறைவனை கூறுவர். நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும் இறைவனது பன்னிரு நாமங்களை ஒவ்வொரு திருமொழிகளில் முழுவதுமாகப் பாடிச் செல்கின்றனர். இதில் நாராயணா என்னும் பெயர் திருமந்திரப் பெருமை உடையது.

**“குலம் தரும்: செல்வம் தந்திடும்: அடியார்**
**படு துயர் ஆயின எல்லாம்**
**நிலந்தரம் செய்யும் : நீள் விசும்பு அளிக்கும்” (956)**

என்று திருமங்கை ஆழ்வார் தனது பாசுரத்தில் நாராயண நாம மகிமை பற்றி பாடுகிறார். இறைவனது நாமம் தரக்கூடிய நன்மைகளைப் பட்டியலிடுகிறார். இறைவனது திருப்பெயர் நம் நாவில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்க பெரியாழ்வார் ஒரு எளிய நடை முறையைக் கூறுகிறார். எல்லாரும் தத்தம் குழந்தைகளுக்கு இறைவனது பெயரினை இடுமாறு வற்புறுத்துகிறார்.

**"மானிட சாதியில் தோன்றிற்று ஓர் மானிட சாதியை,**
**மானிட சாதியின் பேர் இட்டால் மறுமைக்கு இல்லை,**
**வான் உடை மாதவா! கோவிந்தா! என்று அழைத்தக்கால்**
**நான் உடை நாரணன் தம் அன்னை நரகம் புகாள்" (394)**

மேலும் ஆண்டாள் தனது பாசுரத்தில்

**"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்" (476)**

வீட்டிற்கும், நாட்டிற்கும் ஏற்படக்கூடிய நன்மைகள் மற்றும் கிடைக்கக்கூடிய நீங்காத செல்வங்கள் பற்றி பாடுகிறாள். இறைவனது பெயரினை எப்போதும் வாயில் உச்சரித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பது அவள் கருத்து.

**கூட்டு வழிபாடு**

வேத காலத்தில் வேள்விகளும், யாகங்களும், கடுமையான தவங்களும் செய்து இறைவனை வழிபட்ட இறைநெறி, கற்றறிந்த சான்றோர்க்கு மட்டுமே உரியதாக இருந்தது. சாதாரண மக்களால் கடைப்பிடிக்க முடியாத வழிபாட்டு முறைகளும், புரிந்துக் கொள்வதற்கு அரிய தத்துவங்களும், சடங்குகளும் அவர்களுக்கு இறைவனிடம் ஒரு தொலைவினை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் அந்த கருத்துக்களையே ஆழ்வார்கள் எல்லோருக்கும் பயன்படும் விதத்தில் காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி, எளிமைப்படுத்தி அளித்தனர். எல்லோரையும் தம்முடன் இணைத்துக் கொண்டனர்.

**"ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து**
**எங்கள் குழாம் புகுந்து"** (4)

என்று தம்முடன் சேர்ந்து இறைவனை வழிபட பெரியாழ்வார் அழைக்கிறார்.

ஆண்டாள் தன் வயதை ஒத்த தோழிகளை அழைத்துக்கொண்டு பாவை நோன்பு நோற்ற முப்பது பாசுரங்கள் "திருப்பாவை" என்று அழைக்கப்படுகிறது. இது போலவே முதல் மூன்று ஆழ்வார்களும் திருக்கோவிலூரில் ஒரு வீட்டின் இடைக்கழியில் சந்தித்துக் கொண்டபோது முதல் மூன்று அந்தாதிகளும் அருளப்பட்டன.

**"வையம் தகழியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காக" (2082)**

என்று பொய்கையாழ்வார் புற வழிபாடுசெய்ய,

**"அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக**
**இன்பு உருகு சிந்தை இது திரியாக" (2182)**

என்று பூதத்தாழ்வார் அக வழிபாடு செய்ய,
இவர்களுடன் இருந்த பேயாழ்வார்,

**"திருக் கண்டேன் : பொன்மேனி கண்டேன்: திகழும்**
**அருக்கன் அணி நிறமும் கண்டேன்:" (2282)**

என்று பாட மூன்று ஆழ்வார்களும் இறை தரிசனம் பெறுகின்றனர்.

**அர்ச்சை வழிபாடு**

இறைவனது ஐந்து நிலைகளான பரத்துவம், வியூகம், விபவம் என்பதில் முதல் மூன்று நிலைகளில் காணக்கிடைக்கும் இறைவனது உருவம், குணம் ,அழகு முதலிய இறைத் தன்மைகள் பருப்பொருள் வடிவாக அர்ச்சை என்று அழைக்கப்படும் இறைவனது ஆலயத்தில் குடி கொண்டு அருளும் இறை மூர்த்தங்களில் காணக் கிடக்கிறது.

**"ஆழ்வார்கள் பல இடங்களில் பிரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே"**

என்று ஸ்ரீ வசன பூசணம் (சூத்திரம் 38) கூறுகிறது. ஆழ்வார்கள் இறைவனது அர்ச்சை உருவங்களை வழிபட்டே தாம் விரும்பிய பிரபத்தி நெறியினை பின்பற்றினர் என்பது வைணவ பெரியோர் கூற்று. இறைவனது உருவங்கள் எழுந்தருளப்பட்டு இருக்கும் ஆலயங்கள் உள்ள ஊர்களுக்குச் சென்று ஆழ்வார்கள் வழிபட்டனர். அவர்கள் பாசுரங்கள் பாடி மங்களாசாசனம் செய்த தலங்கள் மேலும் சிறப்படைந்து திவ்விய தலங்கள் ஆயிற்று. இறைவனது திருமேனியின் அழகு, கருணை, எளிமை, சிறப்பு இவை பற்றி ஆழ்வார்கள் பாட மக்களும் இறைவனின் பெருமையை உணர்ந்தனர். இறை திருமேனியை தரிசிக்கும் போது இறைவனையே கண்ணால் காணும் ஒரு பேரின்ப அனுபவத்தினை அடைந்தனர். அந்த பேரின்பம் அவர்களது வாழ்வினை அர்த்தப்படுத்தியது.

இவ்வுலகில் அவர்களது இருப்பு அங்கீகாரத்திற்கு உரிய ஒன்றாக மாறியது. வாழ்வினுக்கு ஒரு முழுமை கிடைத்தது. அர்ச்சை உருவத்தை நேரில் காணும்போது ஏற்பட்ட உயர்ந்த ஓர் உணர்வு மனிதர்களை அவர்களது சிறுமைத்தனங்களில் இருந்து விடுவித்தது. இப்பிறவியிலேயே இறையின்பம் பெற்று தேவர்களுக்கு நிகராகத் தம்மை உணர வைத்தது.

ஆழ்வார்களில் நிறையே புனித தலங்களுக்குச் சென்று அர்ச்சாவதார மூர்த்தியை அதிகமாகப் பாடியவர் திருமங்கை ஆழ்வார் ஆவர். அவர் மொத்தம் 86 திவ்விய தேசங்களைப் பாடி உள்ளார். திருமிழிசைஆழ்வார் தனது பாசுரத்தில்,

**"ஊன் வாட உண்ணாது, உயிர் காவல் இட்டு,**
**உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து,**
**தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா" (1158)**

என்று தம் உடலை வருத்திக் கொண்டு செய்யும் தவத்தை அவ்வளவு உயர்வாகச் சொல்லவில்லை. அதற்கு மாறாக இறைவன் எழுந்தருளி இருக்கும் திருச்சித்திரக்கூடம் என்னும் திருத்தலத்திற்குச் சென்று அவனது அர்ச்சை உருவத்தைக் கண்டு வணங்கினால் பிறவித்துயர் தீரும் என்கிறார். தனக்கென்று ஓர் உருவம் இல்லாத பெருமான் தன் பக்தர்களின் அன்பிற்குக் கட்டுப்பட்டு அர்ச்சை திருமேனிகளில் வந்து வாசம் செய்கிறான் என்பது வைணவர் கருத்து.

**பக்தியே பக்தியின் பலன்**

இறைவனை வழிபடும் எளிய வழிபாட்டு முறைகளைக் காட்டிய ஆழ்வார்களுக்கு நெறியும் குறிக்கும் ஒன்றே. இறைவனை அடையும் வழி பக்தி. அந்த பக்தியால் அவர்கள் அடையும் பயன் பக்தியே. உண்ணும் சோறு, பருகும் நீர் எல்லாவற்றிலும் திருமாலைக் கண்ட ஆழ்வார்கள் தம் பக்தியை விரும்பி அனுபவித்தனர் எனலாம்.

**"காலும் எழா, கண்ணா நீரும் நில்லா, உடல்**
**சோர்ந்து நடுங்கி குரல்**
**மேலும் எழா, மயிர்க் கூச்சும் அறா, என**
**தோள்களும் வீழ்வு ஒழியா" (457)**

என்று பெரியாழ்வார் இறை தரிசனம் கிடைத்த போது தனக்கு ஏற்பட்ட உணர்வுகளை அழகாகக் கூறுகிறார்.

இறைவனிடம் தாய், தந்தை, குழந்தை, தலைவன், உடையவன், நண்பன் போன்ற உறவு முறைகளின் ஆழ்வார்கள் அனுபவித்தனர். இறைவனிடம் ஒரு நெருக்கத்தினை ஏற்படுத்தினர். இறைவனைத் தலைவனாக்கிப் பரகால நாயகி, பராங்குச நாயகி என்ற நிலைகளில் நின்று அகத்துறை பாடல்களைப் பாடி இறைவனைப் பக்தி செய்து மகிழ்ந்தனர். ஆழ்வார்களைக் கற்கும் யாவருக்கும் இந்த இறையின்பம் கிடைக்க வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோள் ஆகும்.

**முடிவுரை**

பக்தி மதமான வைணவத்தை தம் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் இலக்கியம் வழி உலகறியச் செய்தவர்கள் ஆழ்வார்கள். இறை அருளாலும், எத்துணையோ பிறவிகளில் செய்த தவத்தாலும் தாம் பெற்ற மெய்யியல் கருத்துக்களை தமக்கு மட்டும் என்று வைத்து பயன் தேடாமல்

இந்த உலக மானிடர் அனைவரும் உய்ய வேண்டும் என்ற மனதுடன் தம் அருளிச் செயல்கள் மூலம் அருளிப்போந்தனர்.

**"உள்ளம், உரை, செயல் உள்ள இம்மூன்றையும்**

**உள்ளிக் கெடுத்து, இறை உள்ளில் ஒடுங்கே"** (2693)

என்றவாறு இறைவனை வழிபடவேண்டும் என்று நம்மாழ்வார் கூறுகிறார்.

இறைவனை மலர், புகை, நீர் கொண்டு வழிபட்டால் போதும் என்று ஆழ்வார்கள் கூறுகின்றனர். ஆனால் அது உண்மையான வழிபாடாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். அதேபோல் வாழ்கை அறம் சார்ந்து இருக்க வேண்டும் என்பதிலும் குறியாக இருக்கின்றனர்.

**"தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய்**

**நீதியாரோடும் கூடுவதில்லை நான்" (672)**

என்று நீதி நெறியில் நடக்காதவர்களோடு தமக்கு எந்த உறவு இல்லை என்று ஆணித்தரமாக குலசேகர ஆழ்வார் தன் கருத்தைக் கூறுகிறார். பிற ஆழ்வார்களின் கருத்தும் அதுவே.

**"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு**

**உற்றோமே ஆவோம்" (502)**

என்ற ஆண்டாள் கூற்றின் படி அடியவர்கள் இறைவனோடு தொடர்பு கொள்ளவேண்டும். அப்போதுதான் இறைவனின் அன்பு வடிவத்தை உணர்ந்துக் கொள்ளமுடியும். மேலும், பக்தி வழியினைக் கைக்கொண்டால் இயற்கையில் வெளிமுகமாகத் திருப்பி வைக்கப்பட்டுள்ள புலன்களை உள்முகமாகத் திருப்பி தன்னை உணர்ந்துக்கொண்டு, தனக்குள் இருக்கும் இறைவனை அறிந்துக் கொண்டு இறையின்பம் பெறலாம் என்று ஆழ்வார்கள் தம் வாழ்நாள் கருத்தாகக் கூறிய இறையியல் நெறியினையும் பின்பற்றி பயன் அடையமுடியும். அதற்கு ஆழ்வார்கள் அருளிய எளிய பக்தி நெறிகள் வழிகாட்டும்.